JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**CC No. 112/2015**

**Accused absent. Petition U/s.317 of Cr.P.C. filed and allowed.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of 18.06.2025.
**P.W. 1 Name: Ramasamy S/o. Palanisamy**

**மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் நீதிமன்ற அனுமதியுடன் அ.சா.1 அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**1. S**.P. முருகேசன், பிரதீப்குமார் ஆகியோர்கள் எனக்கு தெரிந்தவர்கள் என்றால் ஆமாம். ஒரு கிரையம் வாங்கிய விதத்தில் எனக்கு பழக்கம். காளியப்பன் மற்றும் குமரவேலிடம் இருந்து பெருந்துறை காஞ்சிக்கோவில் ரோட்டில் உள்ள திருவேங்கடம்பாளையம் என்ற ஊரில் 506/3/5 என்ற காலையில் உள்ள சொத்தை 1.50 ஏக்கர் விஸ்தாரம் உள்ள சொத்து நான் கிரையம் பெற்றதாக முதல் விசாரணையில் சொல்லி உள்ள சங்கதிகள் தவறானது என்றால் சரிதான். நான் நேரடியாக அவர்களிடம் இருந்து கிரையம் பெறவில்லை. S.P. முருகேசன், பிரதீப்குமார் ஆகியோர்களிடமிருந்து பொது அதிகார பத்திரம் மூலமாக கிரையம் பெற்றேன் என்றால் சரிதான்.

2. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் மேற்கண்ட காலை என்றால் சரிதான். S.P. முருகேசன், பிரதீப்குமார் ஆகியோர்கள் என்னுடன் சேர்ந்து ஒரு பதிவு செய்யப்படாத பைனான்ஸ் நிறுவனம் நடத்தி வந்தீர்கள் என்றால் சரியல்ல. சம்பவ நடந்நதாக சொல்லப்படும் இடத்தில் இருந்து என்னுடைய வீடு 1 – 2 பர்லாங்கு தூரம் இருக்கும். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் மின் இணைப்பு எதிரிகள் பெயரில் தான் உள்ளது என்றால் சரியல்ல. கட்டுத்தரை மட்டும் உள்ளது. நான் என் முதல் விசாரணையில் எனக்கு சொந்தமான இடத்தில் உள்ள அறைக்குச் சென்று கதவை தாழிட்டுக் கொண்டார் என்று சொன்னது தவறு என்றால் சரியல்ல.

3. மேற்படி எனக்கு சொந்தமான இடத்தில் உள்ள அறைக்குச் சென்று 4ம் எதிரி கதவை தாழிட்டுக் கொண்டார் என்று புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு ராமசாமி, சோமசுந்தரம், சுப்பரமணி ஆகியோர்கள் வந்நதாக சொல்லக்கூடியது பொய் என்றால் சரியல்ல. சம்பவ நடந்நததாக சொல்லப்படும் இடம் யாருக்கு சொந்தமானது என்ற வழக்கு சிவில் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு சென்று 4ம் எதிரி என் மீது புகார் கொடுத்து பெருந்துறை காவல் நிலையத்தில் குற்ற எண். 580/2010 ஆக பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் யார் வீடு உள்ளது என்றால் வீடுகள் எதுவும் இல்லை.

4. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் யார் பயிர் செய்து வருகிறார்கள் என்ற அடங்கல் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். நான் என்னுடைய முதல் விசாரணையில்சொல்லியுள்ள இரும்பு பிடி போட்ட மற்றும் மரப்பிடி போட்ட அரிவாள் யார் வைத்திருந்தார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு அருகில் கிடந்தததாக சொல்லப்படும் இரும்பு பிடி போட்ட மற்றும் மரப்பிடி போட்ட அரிவாள் ஆகியவற்றை புகைப்படம் எடுத்து காவல் நிலையத்ததல் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். காவல் துறையினர் விசாரித்த போது மேற்படி ஆயுதங்களை காட்டி விசாரயை செய்தார்களா என்றால் விசாரித்தார்கள். போலீசார் சான்று பொருட்களை எத்தனை மணிக்கு காண்பித்து விசாரித்தார்கள் என்றால் 4 நாட்கள் கழித்து மதியம் 2.30 மணி இருக்கும்.

5. முதல் விசாரணையில் ஸ்ரீவித்யாவை அவரது உறவினர்கள் தடுத்து நிறுத்தி அறைக்கு வெளியே அழைத்து வந்தார்கள் என்று புகாரில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. அந்த உறவினர்களின் பெயர் புகாரிலும், வாக்குமூலத்திலும் சொல்லப்படவில்லை என்றால் தற்போது ஞாபகம் இல்லை.உறவினர்கள் சம்பவ இடத்தில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி குடியிருக்கிறார்கள் என்றால் 1 கி.மீ க்குள் இருக்கும். சம்பவ நடந்த இடத்திலிருந்து காவல் நிலையம் எத்தனை கி.மீ இருக்கும் என்றால் சுமார் 2 கி.மீ இருக்கும். சம்பவம் எவ்வளவு நேரம் நடைபெற்றது என்றால் ½ மணி நேரம் இருக்கும். சம்பவம் குறித்து காவல் நிலையத்திற்கு தகவல் தெரிந்து

போலீசார் சம்பவ இடம் வந்து விசாரித்தார்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. அ.சா. ஆ.1 புகார் மனு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் என்னுடைய அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. யார் அ.சா.ஆ. 1 புகாரினை எழுதினார்கள் என்றால் நான் தான் எழுதினேன். பின்னிட்டு மறுபடியும் போலீசார் எழுதிக் கொண்டார்கள். புகார் கொடுத்த அன்றே முதல் தகவல் அறிக்கை கொடுத்தார்களா என்றால் 4 நாட்கள் கழித்து கொடுத்தார்கள்.

6. புகார் கொடுத்த அன்றைய தினமே போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என வருத்தமா எனக் கேட்டால் அன்றைய தினம் ஒரு துண்டு சீட்டு கொடுத்தார்கள். துண்டு சீட்டு கொடுத்த பின்னிட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு 4 நாட்கள் முன்பு யார் யாரை விசாரித்தார்கள் என்றால் ராமசாமி , சுப்பரமணி, கோவிந்தசாமி என்பவரை விசாரித்தார்கள். சம்பவம் நடந்த இடம் தனியாருக்கு சொந்தமானது என்றால் T.P. ராமசாமிக்கு சொந்தமான இடம். சம்பவம் நடைபெற்ற நாளில் சிவில் வழக்கு நடைபெற்றது என்றால் சரிதான். சிவில் வழக்கை வலுப்படுத்துவதற்காக இடம் எனக்கு சொந்தமானது என எதிரிகள் மீது பொய்யாக வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. சம்பவ தினத்தன்று மேற்படி இடம் எனக்கு சொந்தமானது என்பது பொய்யானது என்றால் சரியல்ல. S.P. முருகேசன், பிரதீப்குமார் ஆகியோர்கள் மூலம் மோசடியான கிரையத்தை பெற்றுக்கொண்டு எதிரிகள் மீது பொய்யாக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்திலும், சிவில் வழக்கினை குற்றவியல் வழக்காக கொடுத்துள்ளேன் எனவும் நடக்காத சம்பவத்திற்கு புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தான் போலீசார் வழக்கு பதிவு செய்யவில்லை எனவும், அரசியல் பலத்தை கொண்டு புகார் கொடுத்து பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. ஏற்கனவே ஒரு புகார் கொடுக்கப்பட்டு அது இந்த வழக்கிற்கு தகுந்தாற் போல் இல்லை என்பதால் பின்னிட்டு ஒரு பொய்யான புகார் தயாரிக்கப்பட்டு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சம்பவ நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் எதிரிகளுடையது என்றால் சரியல்ல. என்னுடையது ஆகும். எதிரிகளிடம் இருந்து சொத்தை அபகரிக்க வேண்டும் என்பதற்காக போலீசார் உதவியுடன் பொய்

**வழக்கு போடப்பட்டுள்ளது என்றால்ச ரியல்ல. முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை எனவும், சான்று பொருட்களுக்கும் ,எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.**

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை